ஒதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளை முறைப்படுத்த சட்டமன்றப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப் படலாமென்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்து உள்ளது. அவ்வாறே, 1981–82 ஆம் ஆண்டிற்கான, மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகளின் விவர அறிக்கை தற்போது தாக்கல் செய்யப்படுகிறது. மிகைச் செலவு மொத் தம் ரூ. 9.17 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில், பாசனம், ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், பொதுப் பணிகள் (கட்டிடங்கள்) ஆகியவற்றின்கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. மாநிலக் கணக்குத்துறைத் தலைவர், நிதி ஆண்டின் இறுதியில், வட்டிச் செலவுகள், பணியாளரமைப்புச் செலவுகள், எந்திரம்-சாதனங்கள் குறித்த செலவுகள், ஓய்வூதியச் செலவுகள் ஆகியவற்றில் வீதாச்சார அடிப்படையில், இல சரிக் கட்டல்கள் செய்ததால் 'பாசனம்' என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற் பட்டது. ஓய்வூதியத் திட்டங்கள் தாராளமாக்கப்பட்டதாலும், இன்னும் அதிகமான பேருக்கு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம் நீட்டிக்கப்பட்டதாலும், இக் காரணங்களினால் எதிர்பார்த்ததை விட அதிகமான பேருக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்ட தாலும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இவ்வாண்டில், பல அகவிலைப்படித்தவணைத் தொகைகள் வழங்கப்பட்டதாலும், 'ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்' என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டு உள்ளது.

4. புயல், வெள்ளம் முதலியவை காரணமாகச் சிறப்புச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் பொதுப் பணி கள் (கட்டிடங்கள்) என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. இம் மானியத்தின் கீழ் வரும் கணக்குகள் தவறாக வகைப்படுத்தப் பட்டதாலும் ஓரளவுக்கு மிகைச் செலவு ஏற்பட்டது.

5. 1981–82 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகள் பற்றிய விவர அறிக்கைக்கு ஒப்பு தலளிக்குமாறு பேரவையை வேண்டி அமர்கிறேன்.

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1982-83 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மேல் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது. அந்த மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத் தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1982–83 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில், சில மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச்செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1982–83 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளை முறைப்படுத்த சட்டமன்றப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாமென்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1982–83 ஆம் ஆண்டிற்கான, மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. மிகைச்செலவு மொத்தம் ரூ. 8.71 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில், ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், மாநில அரசு வழங்கும் கடன்களும்—முன் பணங்களும், மாவட்ட நிருவாகம் ஆகியவற்றின் கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. எதிர்பார்த்ததைவிட அதிகமான பேருக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டதாலும், இறப்பு-பணிக் கொடைக்கான உச்ச வரம்பை 24,000 ரூபாயிலிருந்து 36,000 ரூபாயாக உயர்த்தியதாலும், குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியத் தொகையை திங்களொன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 125 ரூபாயாக உயர்த்தியதாலும் ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

4. எதிர்பார்த்ததைவிட அதிக எண்ணிக்கையில் பண்டிகை முன் பணங்களுக்கு அதிகாரிகள் அனுமதி வழங்கியதாலும், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்த மாநகராட்சிகள், நகராட்சிகள், நகரியங்கள் ஆகியவற்றுக்கு வழிவகை முன் பணங்கள் வழங்கியதாலும், கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான முன் பணத்திற்கு எதிர்பார்த்ததைவிட அதிகமாக அனுமதி வழங்கியதாலும் மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

5. சம்பளங்கள், பயணச் செலவுகள், வாடகை, கட்டண வீதங்கள், வரிகள், மோட்டார் வண்டிகள் மீதான வரிகள், ஏனைய சில்லறைச் செலவுகள் ஆகியவற்றின் கீழ் மாவட்ட ஆட்சியர் மிகைச் செலவு செய்ததாலும் புதிதாக கிராம நிருவாக அலுவலர்களை நியமனம் செய்ததாலும் மாவட்ட நிருவாகம் என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

6. 1982–83 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு பேரவையை வேண்டி அமர்கிறேன்,